தற்போது ஓர் இரயில்வே மேம்பாலம் உள்ளது. அரக்கோணம்–ஒச்சேரி சாலை மற்றும் அரக்கோணம் புறவழிச் சாலையில் இரண்டு இரயில்வே மேம்பாலங்கள் கட்டுவதற்கு, சென்னை–கன்னியாகுமரி தொழில்வழித் தட சாலைகள் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. இந்த நிலையில், பழனிப்பேட்டை சாலை மேம்பாலம் கட்டுமானத்திற்கு அதிக நில எடுப்பு தேவைப்படுவதாலும், குடியிருப்புகள் அதிகமாக இருப்பதாலும், சாலை மேம்பாலம் அமைப்பது சாத்தியம் இல்லையென்று முடிவு செய்து, மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர், தற்போது இருக்கின்ற மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

முற்பகல் 10–45

அரசாணை நிலை எண் 128, நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை, நாள் 12–10–2020 மூலமாக இந்தத் திட்டம் ஏற்கெனவே இரத்து செய்யப்பட்டிருக்கிறது. திரைப்படத்தில் ஒரு பாடல் உண்டு, "கொடுத்தவனே பறித்துக் கொண்டான்டி" என்று. ஏற்கெனவே அந்த அரசால் அறிவிக்கப்பட்டு, அவர்களாலேயே இரத்து செய்யப்பட்டுவிட்டது. இருந்தாலும் ஏற்கெனவே உள்ள மேம்பாலம், மேல்பாக்கம் மேம்பாலம் மூலமாகவும், அரக்கோணம் புறவழிச் சாலை மற்றும் அரக்கோணம்–ஒச்சேரி சாலையில் புதிதாக இரண்டு இரயில்வே மேம்பாலங்கள் கட்டப்பட உள்ளதாலும், பழனிப்பேட்டையில் இரயில்வே மேம்பாலம் கட்ட அவசியமில்லை என்று முடிவு செய்யப்பட்டுள்ளது.

3. விதி 110–ன்கீழ் அறிக்கை

அயோத்திதாசப் பண்டிதர் அவர்களுக்கு வடசென்னையில் மணிமண்டபம் அமைத்தல் குறித்த தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை தொடர்பான முதலமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை விதி 110–ன்கீழ் அறிக்கை அளிக்க வேண்டும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அனுமதி கோரியுள்ளார்கள். அனுமதி அளிக்கப்படுகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவள்ளுவர், ஔவையார், கபிலர்,

வள்ளலார் வரிசையிலே தமிழ்ச் சிந்தனை மரபை வளர்த்தெடுத்த மாபெரும் ஆளுமையான அயோத்திதாசப் பண்டிதர் அவர்களின் பெருமையைப் போற்றக்கூடிய அறிவிப்பு ஒன்றை, விதி 110-ன்கீழ் இந்த மாமன்றத்தில் எடுத்து வைப்பதை நான் பெருமையாகக் கருதுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

தமிழ்நாட்டு அரசியலைப் பொறுத்தவரையில், இரண்டு சொற்கள் இல்லாமல் யாரும் அரசியல் நடத்த முடியாது. ஒன்று, தமிழன்; இன்னொன்று, திராவிடம். (மேசையைத் தட்டும் ஒலி) இந்த இரண்டு சொற்களையும் அரசியல் களத்தில் அடையாளச் சொல்லாக மாற்றியவர்தான், அறிவாயுதம் ஏந்தியவர்தான் அயோத்திதாசப் பண்டிதர் அவர்கள்.

1881 ஆம் ஆண்டே மக்கள்தொகைக் கணக்கெடுப்பில் 'பூர்வத் தமிழர்' என்று பதியச் சொன்னவர் பண்டிதர் அவர்கள். 1891 ஆம் ஆண்டு அவர் தொடங்கிய அமைப்பின் பெயர் 'திராவிட மகாஜன சபை' என்பதாகும். 1907 ஆம் ஆண்டு 'ஒரு பைசா தமிழன்' என்ற இதழைத் தொடங்கி, அதையே 'தமிழன்' என்ற இதழாக நடத்தி வந்தவர் அவர். 'பூர்வீக சாதிபேதமற்ற திராவிடர்கள்' என்று அழைத்தவர் அவர். அதனால்தான் தமிழன், திராவிடம் ஆகிய இரண்டு சொற்களையும் அறிவாயுதமாக அவர் ஏந்தினார் என்று குறிப்பிட்டேன். அவர் போட்டுக்கொடுத்த பாதையில்தான் தமிழ்நாட்டு அரசியல் செயல்பட்டு வருகிறது.

எழுத்தாளர், ஆய்வாளர், வரலாற்று ஆசிரியர், மானுடவியல் சிந்தனையாளர், பதிப்பாளர், பத்திரிகையாளர், மருத்துவர், பேச்சாளர், மொழியியல் வல்லுநர், பன்மொழிப் புலவர், புதிய கோட்பாட்டாளர், சிறந்த செயற்பாட்டாளர், சளைக்காத போராளி எனப் பன்முக ஆற்றலைக் கொண்டவர்தான் அயோத்திதாசப் பண்டிதர் அவர்கள். அவரது தாத்தா திரு. கந்தப்பன் அவர்கள், தன்னிடம் இருந்த திருக்குறள் ஓலைச் சுவடிகளை திரு. எல்லீஸ் அவர்களிடம் கொடுத்து, திருக்குறளை அச்சுப் பதிப்பாக கொண்டுவந்ததை நினைக்கும்போது, குறளுக்கு அவருடைய குடும்பம் ஆற்றிய தொண்டுக்காக நாம் அனைவரும் தலைவணங்க வேண்டும்.

தந்தை பெரியார் அவர்களே, "என் பகுத்தறிவுப் பிரச்சாரத்துக்கும், சீர்திருத்தக் கருத்துகளுக்கும் முன்னோடி அயோத்திதாசப் பண்டிதர்தான்" என்று குறிப்பிட்டிருக்கிறார்.

(மேசையைத் தட்டும் ஒலி) அதனால், அவர் சொன்னதைத் தாண்டி நான் எதுவும் சொல்ல வேண்டிய அவசியமில்லை. "இந்திய நாட்டின் முன்னேற்றத்துக்கு சாதியும், மதமுமே தடை" என்று சொன்ன அயோத்திதாசர், "மனிதர்களை மனிதர்களாகப் பார்க்கும் எவரோ, அவர்தான் மனிதர்" என்று முழங்கினார்.

1845 முதல் 1914 வரை வாழ்ந்த அயோத்திதாசர் அவர்களுடைய 175-வது ஆண்டு விழாவின் நினைவாகவும், அவரது அறிவை வணங்கும் விதமாகவும், வடசென்னைப் பகுதியில் மணிமண்டபம் அமைக்கப்படும் (மேசையைத் தட்டும் ஒலி) என்ற அறிவிப்பை வெளியிடுவதில் இந்த அரசு பெருமைப்படுகிறது.

மகான் புத்தரை 'இரவு பகலற்ற ஒளி' என்று சொன்ன அயோத்திதாசப் பண்டிதர் அவர்களுடைய சிந்தனைகளும், இரவு பகலற்ற ஒளியாக இந்தத் தமிழ்ச் சமுதாயத்துக்குப் பயன்பட வேண்டும் என்று சொல்லி அமைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

4. தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை தொடர்பான முதலமைச்சரின் அறிவிப்புக்கு நன்றி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. வேல்முருகன், சுருக்கமாகச் சொல்லுங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. ஜெகன் மூர்த்தி அவர்கள்.*

திரு. மு. ஜெகன் மூர்த்தி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பட்டியலின மக்களுடைய முதல் போராளியாகத் திகழ்ந்த தாத்தா அயோத்திதாசப் பண்டிதர் அவர்களுடைய புகழைப் போற்றுகின்ற வகையில் வடசென்னையில் அவருக்கு மணிமண்டபம் அமைக்கப்படும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்த, அந்த அறிவிப்புக்கு புரட்சி பாரதம் கட்சியின் சார்பாக நன்றியைத் தெரிவித்து, பாராட்டுகின்றது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். நன்றி. வணக்கம்.*

முற்பகல் 10-50

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன் அவர்கள்.*